DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.4

Name : **Selvi. நிஷாபானு** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 19.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது போடி, மேலத்தெருவில் எனது பாட்டி மற்றும் எனது அண்ணன் பாசித் ரகுமானுடன் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா இறக்கும்போது நான் 12–ம் வகுப்பு படித்து வந்தேன். எனது அப்பா இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எனது வீட்டிலிருந்து நான் எனது பாட்டி வீட்டிற்கு சென்று விட்டேன். அவ்வாறு ஒரு மாதத்திற்கு முன்பு எனது பெற்றோர்களை விட்டுவிட்டு பாட்டி வீட்டிற்கு சென்ற காரணம் எவ்வளவு நாளைக்கு முன்பு என்றால் எனது அப்பா இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எனது மாமா வந்து எதிரிகள் இருவருக்கும் இடையே உள்ள உறவு தொடர்பாக பிரச்சனை செய்து எனது அம்மாவை அடித்துவிட்டார் இது சம்பந்தமாக எனது அம்மா போடி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.

2. தனக்கு கணவரோ, குழந்தைகளோ அம்மாவோ வேண்டாம் என்றும், காவல் நிலையத்தில் தெரிவித்து இருந்தார். நான் அந்த சமயம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன் என்பதால் வீட்டில் நடக்கும் விஷயங்கள் எனக்கு அவ்வளவாக தெரியாது. அந்த சமயம் எனது அப்பா என்னை அழைத்து இங்கு எனக்கு பாதுகாப்பு இல்லை என்றும் கொஞ்சம் நாட்கள் நீ பாட்டி வீட்டில்

இருக்க வேண்டும் என்று என்னிடம் தெரிவித்தார். அதனால் நான் எனது பாட்டி உபைதா வீட்டிற்கு நான் சென்று விட்டேன். லீவு நாட்களில் மட்டும் எனது அப்பாவை வந்து நான் பார்த்து விட்டு செல்வேன். ஒரு முறை நான் பாட்டி வீட்டில் ஏதேனும் சமையல் செய்தால் நான் எனது அப்பாவிற்கு எடுத்து வரும்போது எனது அப்பா என்னிடம் பாட்டி வீட்டிலிருந்து எடுத்துவரும் உணவு சுவை தெரிவதாகவும், வீட்டில் சாப்பிடும் உணவு சுவை தெரியவில்லை என்றும், என்னிடம் புகார் தெரிவித்து இருந்தார்.

3. எனது அப்பா இறப்பதற்கு 1 1/2 வாரத்துக்கு முன்பு நான் எனது அப்பாவை பார்க்கவில்லை. நவம்பர் 10 ஆம் தேதி 2019 ஆம் தேதியன்று உறவினர் எங்களுக்கு போன் செய்து எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியல்ல வீட்டுக்கு வருமாறு தெரிவித்தார்கள். எனது அப்பா அந்த சமயம் இறக்கும் தருவாயில் இருந்தார், அவரால் பேச இயலவில்லை. எங்களை பார்த்தவுடன் கண்ணீர் வந்தது. அந்த சமயம் அங்கு வீட்டில் அம்மாவும் இல்லை. விசாரிக்கும்போது எனது அம்மா வேறொருவருடன் தொடர்பில் இருந்த காரணத்தினால் எனது பாட்டி சொல்லியும் கேட்காமல் அவரை தள்ளி விட்டுவிட்டு எனது அம்மா சென்று விட்டதாக தகவல் சொன்னார்கள்.

4. எனது அப்பாவின் இறப்பில் எங்களுக்கு சந்தேகம் இருந்த காரணத்தினாலும் நாங்கள் புகார் தெரிவித்திருந்தோம். பிரச்சனை நடந்து கொண்டிருக்கும்போது பாட்டி எங்களைப் பார்த்துக் கொள்வதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். இரவு நான் வெகு நேரம் படிப்பதால் எனக்கு எனது அம்மா காபி கொடுப்பார், பாட்டி அந்த காபியை என்னை குடிக்க வேண்டாம் என்று ஒரு முறை அறிவுரை சொன்னார், என்ன காரணம் என்று எனக்கு தெரியவில்லை. அப்போது நான் ஒரு நாள் குடிக்காமல் இருந்த போது எனது அம்மா எங்களை விட்டு விட்டு வெளியில் சென்றதை பார்த்தேன், அதனால் தான் எனக்கு எனது அம்மா மீது சந்தேகம் இருந்தது.

5. என் முன்னிலையில் எனது பாட்டி எனது அம்மாவிடம் ஒரு பெண் குழந்தை இருக்கும்போது நீ இவ்வாறு செய்யக்கூடாது என எனது அம்மாவிடம்

சண்டை போட்டதை நான் பார்த்துள்ளேன். 2ம் எதிரியை ஒருமுறை எங்கள் தெருவில் வைத்து பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டிற்கு அவர் வந்து பார்த்ததில்லை, எங்கள் கடைக்கு அவர் வந்ததை பார்த்திருக்கிறேன். லீவு நேரங்களில் 4–5 முறை அவர் எங்கள் கடைக்கு வந்ததை பார்த்திருக்கிறேன்.எனக்கே எனது அம்மா மாத்திரை கொடுத்து தூங்க வைத்திருந்த காரணத்தினால் எனது அப்பாவிற்கும் மாத்திரை கொடுத்து அவர் இறக்க காரணமாக இறந்திருக்கலாம் என்று எங்களுக்கு சந்தேகம் வந்த காரணத்தினால் தான் புகார் தெரிவித்தோம். சம்பவத்திற்கு ஆறு வருடத்திற்கு முன்பே எங்களது அப்பாவிற்கு உடல்நிலை நன்கு தேறி அவர் நல்ல ஆரோக்கியத்துடன் தான் இருந்தார் அவ்வாறு இருக்கும்போது பிரச்சினை ஆரம்பித்து ஒரு மாதத்திலேயே அவர் இறந்து போனதால் தான் எங்களுக்கு சந்தேகம் இருந்தது. நீதித்துறை நடுவர் இது சம்பந்தமாக விசாரணை செய்யும்போது நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் அந்த வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.சா.ஆ.5. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு <u>இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>**

1. எனது தந்தைக்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை அளித்து வந்தோம் என்றால் சென்னையில் ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தோம் அது அல்லாமல் தேனி க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தோம். எனது தந்தை தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது நான் உடன் சென்றிருக்கிறேன். எனது அப்பா இறப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு நான் மருத்துவமனைக்கு அவரை அழைத்துச்

சென்று இருக்கிறோம் என்றால் ஆறு வருடத்திற்கு முன்பு அழைத்துச் சென்றிருக்கிறோம். தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசார் என்னை விசாரிக்கும்போதும், நான் சொல்லியுள்ளேன்.

2. நவம்பர் 10 ஆம் தேதி 2019 ஆம் ஆண்டு காலையில் 9:00 மணியளவில் எங்கள் உறவினர்கள் சொல்லி நாங்கள் எனது அப்பாவை பார்க்க சென்றோம். எனது அப்பாவின் பிரேதத்தை பகல் 12.00 மணியளவில் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அன்றைய தினமே எனது அண்ணனும் கோயம்புத்தூரில் உள்ள கல்லூரியிலிருந்து மாலையில் வந்தார். எனது அம்மாவும், எனது அப்பாவின் இறப்பிற்கு வந்திருந்தார் என்றால் சரியல்ல. நான் கடைசியாக எனது அம்மாவை ஒரு வாரத்திற்கு முன்பு தான் பார்த்திருந்தேன். அதன் பிறகு எனது அப்பா இறப்பிற்கு நான் எனது அம்மாவை பார்க்கவில்லை. எனது அம்மா எனது அப்பாவின் இறப்பிற்கு வந்திருந்தார் என்றும் எனது மாமாவும் எனது பாட்டியும் எனது அம்மாவை விரட்டி விட்டார்கள் என்றால் சரியல்ல.

3. எனது அப்பாவிற்கு பெற்றோர்கள் யாரும் இல்லை, முன்பே இறந்து விட்டார்கள். கூட பிறந்தவர்களும் யாரும் கிடையாது. அப்பாவின் சித்தப்பா மற்றும் சித்தி பசங்கள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்கள் எனது அப்பா வீட்டருகில் வசிக்கிறார்களா என்றால் அவர்கள் வசிக்கவில்லை. எனது தாயார் காவல் நிலையத்தில் தனக்கு குழந்தைகள், கணவர் வேண்டாமென்று எழுதி கொடுத்ததாக கூறுவது பொய் என்றும், எனது மாமா சொல்லித்தான் இவ்வாறு நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவே இது பற்றி என்னிடம் தெரிவித்திருக்கிறார். எனது மாமாவுக்கும், எனது அம்மாவிற்கும் எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே சண்டை சச்சரவுகள் இருந்து வந்தது என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே குடும்ப பிரச்சினை இருந்து வந்தது என்றும், அதை வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது அப்பா வேலைக்கு செல்லாமல் நோய் தீவிரம் காரணமாக வீட்டில் மருந்து மாத்திரைகள் சாப்பிட்டுக்கொண்டு படுத்த படுக்கையாக இறப்பதற்கு முன்பிருந்தே இருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா குடும்ப பிரச்சனை காரணமாக மது போதைக்கு அடிமையாகி விட்டார் என்றால் சரியல்ல. மன உளைச்சல் காரணமாக எனது அப்பா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. போடியில் நாங்கள் குடியிருந்தது எனது அப்பாவிற்கு சொந்தமான வீடு என்றால் சரிதான். அந்த சொத்தை எனது மாமா மற்றும் பாட்டி எனது அம்மாவிடம் செல்லாமல் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் பெயருக்கு மாற்றி எழுதுவதற்காக இந்த பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றும், நான் அவ்வாறு சம்பவம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல முதல் விசாரணை சொன்ன விபரங்கள் அனைத்தும் எனது மாமா பாட்டி சொல்லிக் கொடுத்து பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் முன்னிலையில் இவ்வாறான வாக்குமூலம் நாள் அளிக்காமல் முதல்முறையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா இறப்பிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:57:43 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.